[2003 மார்ச் 28

129—

பழத்தோட்டம்

***19589—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலையிலுள்ள தகரக்குப்பம், கூடப்பட்டு அரசு பழத்தோட்டப் பண்ணைகள் பாராமரிப்பு இல்லாமலுள்ளதை அரசு தனியாருக்குக் குத்தகை விடுமா அல்லது பண்ணைகளைச் சீரமைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கூடப்பட்டு மற்றும் தகரக்குப்பம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளைத் தனியாருக்குக் குத்தகை விடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.கே. இராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்திலே மூன்று பழத் தோட்டப் பண்ணைகள்தான் இருக்கின்றன. ராணிப்பேட்டையிலே இருக்கின்ற நவ்லாக், ஜவ்வாது மலையிலே இருக்கின்ற தகரக்குப்பம், கூடப்பட்டு. ஆனால் இன்றைய நிலைமையிலே இந்தப் பண்ணைகள் எல்லாம் அழிந்துகொண்டு வருகின்றன. பராமரிப்பு இல்லாமல் அங்கே ஒட்டு வீரியச் செடிகளை முறையாக உற்பத்தி செய்யாததாலும் அந்தப் பண்ணைகளை எல்லாம் மூடக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தகரக்குப்பத்திலே இருக்கின்ற அந்தத் தோட்டப் பண்ணையிலே மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை போன்ற வீரிய ரகச் செடிகளை ஒட்டு இறக்குகிறார்கள். அதேபோல, கூடப்பட்டியிலே இருக்கின்ற பண்ணையிலும் ஒட்டு இறக்குகிறார்கள். அங்கே பல பூச்செடிகளையும் குரோட்டன்ஸ் செடிகளையும் உற்பத்தி செய்து மாநில திட்டங்களுக்கும், தனியார்களுக்கும் விற்று வருகிறார்கள். ஆனால், தொடர்ந்து

2003 மார்ச் 28]

நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தப் பண்ணைகளை இலாபம் அடைய வைக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே தகரக்குப்பத்தில் இருக்கின்ற அந்தப் பண்ணையிலே மூன்று கிணறுகள் இருந்தும் இன்று வரை அதற்கு மின் சர்வீஸ் கொடுக்கப்படவில்லை. அங்கே டீசல் எஞ்சின் மூலமாகத்தான் 86 ஏக்கர் நிலத்திலே இருக்கின்ற அந்தப் பண்ணைக்கு இன்றுவரைக்கும் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மும்முனை மின்சார இணைப்பு கொடுத்து அங்கே 3 எச்.பி. மோட்டார் போட்டு தண்ணீர் இறைப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அதேபோல செடிகளை உற்பத்தி செய்து வனத் துறை DPAP-தரிசுநில மேம்பாடு மற்றும் Agro Forestry, Social Forestry போன்ற நிறுவனங்களுக்குச் சப்ளை செய்தால் அதிகப்படியான இலாபம் கிடைக்கும். இப்பொழுது தனியாரிடத்திலேயிருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதால் இதை, இதுபோன்ற நிறுவனங்களுக்கு உற்பத்தி செய்ய அரசு இந்தப் பண்ணைக்கு ஆர்டர் வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டப்பட்டு அரசு தோட்டக்கலைப் பண்ணை 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இந்தப் பண்ணையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சத்துப் பதினேழாயிரம் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, புளி போன்ற பழச் செடிகள் மற்றும் அழகு மலர்ச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத் திட்டங்களுக்கு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணையிலே 25 பேர் பணிபுரிகிறார்கள். இந்தப் பண்ணை ஆண்டுக்கு ஐந்து இலட்சம் முதல் எட்டு இலட்சம் வரை லாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற பண்ணை. அதுபோல தகரக்குப்பம், அந்தப் பண்ணையிலும் கிட்டத்தட்ட தொண்ணூற்று ஐந்தாயிரம் அளவுக்குச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசினுடைய திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பண்ணை மூலமும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் அளவுக்கு ஆண்டுக்கு லாபம் வந்து கொண்டிருக்கிறது. அங்கே மூன்று கிணறுகள் இருக்கின்றன; அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி ஆய்ந்து அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்களின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.